RESEARCH ARTICLE

DOI: 10.34256/irjt2148

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

பழமொழி நானூறு வலியுறுத்தும் நெறிமுறைகள்

சி. சந்திரகுமாரி [அ, *]

[அ] தமிழ்த்துறை, பூம்புகார் கல்லூரி (தன்னாட்சி), மேலையூர்-609107, நாகப்பட்டினம், தமிழ்நாடு, இந்தியா.

Proverbs Four Hundred emphasizing ethics

S. Chandrakumari [a, *]

[a] Department of Tamil, Poompuhar College (Autonomous), Melaiyur-609107, Nagapattinam, Tamil Nadu, India.

* Corresponding Author:
chandrakumaris2015@gmail.com

Received: 04-03-2021
Revised: 01-09-2021
Accepted: 07-09-2021
Published: 11-09-2021

ABSTRACT

Proverbs Four Hundred Emphasizing Ethics is the topic of the study. Proverb four hundred says that old sins will go away by doing dharmas. It means doing good deeds in a timely manner. It says that one should not insult a friend among intellectuals, and that such insulting is like insulting ourselves. Wealth that is kept safe should not be put together as big money to help behind. It says that we should give the wealth we have accumulated to others and if we live like that, it will be the great treasure that we will accumulate in the end times. The deeds he has done will benefit one. Surrounding people will not give such an advantage. It is okay to not be able to do beneficial charity for many days. Says do some day. Doing virtue also brings benefits. The proverb says that you will get Motsam as well. Let us attain the Moksha life by doing the proverbial four hundred emphasizing virtue.

Keywords: Emphasizing, Ethics, Wealth, Dharmas, Benefits, Good, Motsam.

முன்னுரை

உலக மக்களுக்குச் செய்கின்ற நல்ல செயல்கள் யாவும் அறத்தின் பாற்படும். சுருக்கமாகச் சொல்லபோனால் உண்மையைக் கூறி நன்மையைச் செய்வதே அறசெயலாகும். அறவழியில் நடப்பவர்க்குத் துன்பம் நெருங்காது. அறச்செயல்கள் நமக்கு மட்டுமின்றி நம்முடைய குடும்பத்திற்கும், நம்முடைய தலைமுறைக்கும் நன்மையைத் தருவதாகும். பரம்பறைக்கும் உதவக்கூடிய அறத்தை மகிழ்வோடு செய்ய வேண்டும், தருமம் செய்யப் பாவம் போகும், நிலையாமையை அறிந்து நன்னெறியோடு நடக்க வேண்டும், நல்லறம் நன்மையைத் தரும், தருமத்தால் மோட்சம் உண்டாகும் போன்றத் தலைப்புகளில் இவ்வாய்வு கட்டுரை அமையப்பெற்றுள்ளது.

தருமம் செய்யப் பாவம் போகும்

செல்வத்தைத் தேடுவதற்கு வேண்டிய புறச் செயல்களைச் செய்ய வறுமை நீங்கிச் செல்வமானது பெருகும். அதுபோல நல்ல தருமங்களைச் செய்யப் பழைய பாவங்கள் எல்லாம் நீங்கிப்போய்விடும். ஆதலால், தருமஞ்செய்யும் இடத்தின் தகுதிகளை அறிந்து செய்த காலத்திலே, தருமம் செய்பவர்களுக்கும் அவர்கள் செல்லும் மறுமை உலகத்தின் கண் அதனால் நன்மை உண்டாகும். இதனை,

" அறஞ்செய் பவர்க்கும், அறவுழி நோக்கித்

திறந்தெரிந்து செய்தக்கால், செலவுழி நன்றாம்;

புறஞ்செய்யச் செல்வம் பெருகும், அறஞ்செய்ய

அல்லவை நீங்கி விடும்"

இப்பாடல் அடிகள் நன்கு உணர்த்துகின்றன (முன்னுறை அரையனார், 2014). நண்பரைப் பழித்தூற்றினால் அந்த இழிவு நம்மையும் வந்தடையும் ஆகையால் நண்பரைப் பழித்து, அறிவுடையோர் பலர் நடுவில் சொல்லமாட்டார்கள். ஏனென்றால் இழிவைத் தருவன பற்றிக் கனவு கண்டவர் அதனை யாரிடமும் சொல்லமாட்டார்கள் அதேமாதிரிதான் நண்பனைப்பழித் தூற்றுவதும், இதனைக்,

"கொழித்துக் கொளப்ட்ட நண்பி னவரைப்

பழித்துப் பலர் நடுவண் சொல்லாடார்- என்கொல்?

விழித்தலரும் நெய்தல் துறைவா! உரையார்

இழித்தக்க காணிற் கனா" (Tamizhpriyan, 2010).

இறப்பை நினைத்து தருமத்தை உடனே செய்க

இருமுது குரவராகிய தாய், தந்தையர்களும் கூடத் தம்மை விட்டுப் போய்விட்டதனைக் கண்டும் இவ்வுலகத்து வாழ்வை நிலையான ஒரு பொருளாக அறிவுடையோர் கொள்ளமாட்டார்கள் அதனால், பொருத்தமான வகையினால் எல்லாம் காலத்தால் தருமங்களை செய்ய வேண்டும் என்கிறார் முன்றுறை அரையனார். குன்றமானது ஊர்ந்து உருண்டு செல்லத் தொடங்கினால் அதன் வழியைத்தடுப்பது எதுவுமில்லை அதுபோல சாவு வருங்காலத்து அதனை வாராது தடுப்பது எதுவும் இல்லை ஆகையால் இளமையோடு இருக்கும் போதே அறத்தைச் செய்ய வேண்டும். என்கிறார் இக்கருத்தை,

"இன்றி யமையா இருமுது மக்களைப்

பொன்றினமை கண்டும் பொருளாக் கொள்பவோ

ஒன்றும் வகையான் அறஞ்செய்க, ஊர்ந்துருளின்

குன்று வழியடுப்ப தில்"

இப்பாடல் உணர்த்துகிறது (Puliyur Kesikan, 2016).

அறமே சிறந்த பெருஞ்செல்வம்

தருமநெறியே இருமையிலும், (இம்மையிலும், மறுமையிலும்,) நன்மையைத் தருவதாகும். இதனை உணர்ந்து பொருளைப் பதுக்கி வைக்காமல் தருமத்தில் ஈடுபடுத்த வேண்டும். தாம் தேடிப்பாதுகாவலாக வைத்த செல்வம் தமக்கு ஆபத்துக் காலத்தில் உதவும்" பெருநிதி" என்று சேர்த்து வைக்கக் கூடாது. அதனைத் தாமும் அனுபவித்து பிறருக்கும் கொடுத்து வாழவேண்டும். அதுதான் நம்முடைய கடைசி காலத்தில் உதவும் பெருநிதியாகும் என்று பழமொழி நானூறு கூறுகிறது இதனை,

"வைத்ததனை வைப்பென்று உணரற்க தாமதனைத்

துய்த்து வழங்கி இருபாலும் -- அத்தகத்

தக்குழி நோக்கி அறஞ்செய்யின் அஃதன்றோ

எய்ப்பினில் வைப்பென் பது" (Puliyur Kesikan, 2010)

.

ஊரோடு ஒத்து வாழ வேண்டும்

ஊருடன் ஒத்து வாழ்தல் வேண்டும். நம்மை நம்பி வந்தவர்க்கும், துறவியர்க்கும் உதவுதலும், கற்று நன்மையென நுட்பமாகத் தெளிந்த ஒன்றைக் கைவிடாமையும் இருக்க வேண்டும். இதுதான் அறம்.

அதாவது நம்மை வந்து அடைக்கலமாகச் சேர்ந்தவர்கள் வருத்தம் அடையுமாறு ஒருபோதும் நடக்கக்கூடாது. துறவியர்களின் ஒழுக்க நெறியினைப் பேணி நடவாமல் ஒதுங்கி நிற்பதும் கூடாது. நாம் ஆராய்ந்து கண்ட பொருள் நுட்பத்தைச் சிந்தித்து செயல்பட வேண்டும். ஊரினர் நடக்கும் பாதையில் நடக்கவேண்டும். அது சரியா? இது முறையா என்று ஆராய்ச்சிப் பண்ணக் கூடாது. இவையே சிறந்த அறநெறியாகும் என்கிறது பழமொழி நானூறு இதனை,

"செல்லற்க சேர்ந்தாற் புலம்பறச் செல்லாது
நில்லற்க நீத்தார் நெறியொரீப் - பல்காலும்
நாடுக தான்கண்ட நுட்பத்தைக் கேளாதே
ஓடுக ஊரோடு மாறு"

இப்பாடலால் நன்கு உணரலாம் (Sivagyanam, 2017).

நிலையாமை அறிந்து நன்னெறியோடு நடக்கவேண்டும்

செல்வத்தால் வரும் வளமையும், புகழும், வலிமையும், வனப்பும், இளமையும், குடிப்பிறப்பும் இவை எல்லாம் உள்ளனவாக மதித்து, அதற்கு அஞ்சித் தன் செயலைக் கைவிட்டுப் போகும் தன்மை கூற்றத்திற்குக் கிடையாது. எமதர்மனின் பிடியிலிருந்து தப்பிப் பிழைத்துப் போனவர்களாக அறியப்படுவர்கள் யாரும் இல்லை. மதிப்புகள் எல்லாம் சாவினை வெல்லும் சக்தி உடையன அல்ல. அதனால் நல்ல நெறியிலே சென்று சிறப்புடையவராக வாழ முயலவேண்டும் என்பதே பழமொழி நானூற்றின் கருத்தாகும் (Vasudevan, 2005), இதனையே,

"வளமையும் தேசும் வலியும் வனப்பும்
இளமையும் இற்பிறப்பும் எல்லாம் -- உளவாய்
மதித்தஞ்சி மாறும.ஃ தின்மையால், கூற்றம்
குதித்துய்ந்து அறிவாரோ இல்"

இப்பாடல் உணர்த்துகிறது (Sivagyanam, 2017).

நல்லறம் நன்மை தரும்

தான் செய்த நல்ல தருமங்கள் ஒருவனுக்குச் செய்யும் நன்மையைத் தன்னுடைய சுற்றத்தாருங்கூடச் செய்ய மாட்டார்கள் அதனால் அறம் செய்வதைப் பல நாளும் தொடர்ந்து செய்ய முடியாதவரே யானாலும், சில நாட்களாயினும் சிறந்த வழிகளாலே ஒவ்வொருவரும் நல்லறத்தைச் செய்ய வேண்டும். அதாவது தருமத்தை தொடர்ந்து செய்ய முடியாமற் போனாலும், முடிந்த வரையிலும் சிலகாலமாவது செய்யவேண்டும். அது நன்மையைத் தருவதாகும். இதனை பழமொழி நானூறு,

"பலநாளும் ஆற்றார் எனினும், அறத்தைச்
சிலநாள் சிறந்தவற்றாற் செடப்-- கலைதாங்கி
நைவது போலும் நுசுப்பினாய்! நல்லறம்
செய்வது செய்யாது கேள்"

எப்போதெல்லாம் முடிகிறதோ அப்பொழுதே நன்மையை செய்துவிட வேண்டும் என இப்பாடல் உணர்த்துகிறது (Puliyur Kesikan, 2016)

தருமத்தால் மோட்சம் உண்டாகும்

அறிவாலே மாட்சியுடையவர் வளமான பெருஞ்செல்வத்தைப் பெற்றவிடத்து, அதனால் தாம் மறுமையிலும் இன்புறும்படியாகத் தமக்கு பாதுகாப்பான அறம் முதலியவற்றைச் செய்து வருவார்கள் அதுவே, பசுமையான கரும்பைத் தின்று அப்போதைக்கு இன்புற்றும் பின்னர் பயன்படுமாறு பாகுகாய்ச்சி வெல்லக் கட்டியாக்கி வைத்தும் பயன்படுத்துவதோடு பொருந்துவதாகும் இதனை,

" மல்லற் பெருஞ்செல்வம் மாண்டவர் பெற்றக்கால்

செல்வுழியும் ஏமாப்பச் செய்வதாம்-- மெல்லியல்

சென்றொசிந் தொல்கு நுசுப்பினாய்! பைங்கரும்பு

மென்றிருந்து பாகு செயல்"

இப்பாடல் வரிகள் மூலம் உணர முடிகிறது (Munrurai Araiyanaar, 2014) அறஞ்செய்வதால் எல்லா நன்மையும் கிடைக்கும். அறம் செய்வதால் மோட்சத்தையும் அடைய முடியும் ஆகவே, நமக்கு இளமை இருக்கும் பொழுதே தக்கக்காலத்தை அறிந்து அறம் செய்திட வேண்டும். காலம் கடந்த பின்பு செய்ய நினைத்தாலும் முடியாது. ஆகையால் நல்ல ஆரோக்கியத்தோடு இருக்கும் பொழுதே அறச் செய்களைச் செய்வது சிறப்பினைத் தரும்.

முடிவுரை

நூல்களைப் படிக்க படிக்க அறியாமை விலகும். நல்ல நூல்களை விரைந்து சென்று படிக்க வேண்டும் பழமொழி நானூற்றில் அறியக் கருத்துகள் பல இருப்பினும், இக்கட்டுரையில் பழமொழி நானூறு வலியுறுத்தும் நெறிமுறைகள் குறித்து சிந்திக்கப்பட்டுள்ளது. உயிர்க்கு நன்மைப்பயப்பதில் அறத்தை விட மேலானது எதுவும் இல்லை என திருக்குறள். இயம்புகிறது. பழமொழி நானூற்றில் தருமமாகிய அறம் செய்வதால் பாவம் போகும் என்றும், அறம் பெருந்செல்வத்தை கொடுக்கக்கூடியதென்றும், நிலையாமைப் பொருந்தியது இவ்வுடல் என்பதை அறிந்து நல்ல நெறியில் நடக்க வேண்டும் என்றும், ஊரோடு ஒத்துவாழ்வதே உயர்ந்த அறம் என்றும், அறம் செய்வதால் மோட்சமாகிய வீடுபேறு கிடைக்கும் என்றும் பழமொழி நானூறு கூறுகிறது. ஆகையால் அறம் செய்து மோட்ச வாழ்வை பெறுவோம்.

References

Munrurai Araiyanaar, (2014) Pazhamozhi Nanooru, Saradha pathippagam, Chennai, India.

Puliyur Kesikan, (2010) Pazhamozhi Nanooru, Sri Senbaga Pathippagam, Chennai, India.

Puliyur Kesikan, (2016) Pazhamozhi Nanooru, Paavai Publications, Chennai, India.

Sivagyanam, V., (2017) Pazhamozhi Nanooru Mulamum Uraiyum, Vijaya Pathippagam, Coimbatore, India.

Tamizhpriyan, (2010) Pazhamozhi Nanooru, Karpagam puthakalayam, Chennai, India.

Vasudevan, K., (2005) Pazhamozhi Nanooru or aaivu, The Parker Publications, Chennai, India.

Funding: NIL

Acknowledgement: NIL

Conflict of Interest: NIL

About the License:

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License